1980 பிப்ரவரி 6]

பள்ளிப்பத்து ஊராட்சிமன்ற எல்லைக்குள் கூடுதல் மின்மாற்றிகள் நிறுவுதல்.

*வினா எண். 62 திரு. இரா. அமிர்தராஜ், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்துகீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்செந்தூர் தாலுகா, பள்ளிப்பத்து ஊராட்சி மன்ற எல்லைக்குள் அடிஷனல் மின்சார டிரான்ஸ்பார்மர் ஒன்றினை நிறுவ எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: திருச்செந்தூர் தாலுகா, பள்ளிப்பத்து, ஊராட்சிமன்ற எல்லைக்குள், இரு 63 கே. வி. ஏ. கூடுதல் மின்மாற்றிகள் நிறுவனம் மின்வாரியத்தால் மதிப்பீடுகள் அனுமதிக்கப் பட்டுள்ளன. இவ் வேலை இவ்வாண்டு மார்ச்சு மாதத்திற்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, அந்த டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்படாத காரணத்தினால், பல்வேறு இடங்களிலும் உள்ள விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தப் பிரச்னைக்கு அமைச்சர் அவர்கள் முன் உரிமை கொடுத்து, மிக விரைவில் இவைகளை அமைக்க ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டில் மார்ச் மாதம் என்பது வெகு தொலைவில் இல்லை.

திரை அரங்குகளில் மின்சார ஏற்பாடுகளைப் பார்வையிடல்.

*வினா எண் 63—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திரைப்பட அரங்குகளில் மின்சார ஏற்பாடுகளைப் பார்வையிட கட்டணங்கள் அதிகமாக்கப்பட்டுள்ளதா?

(ஆ) மேற்படி அதிகக் கட்டணங்களைக் குறைக்க வேண்டுமென்று திரைப்பட அரங்கு உரிமையாளர்களிடமிருந்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகாவிலே இப்பொழுதான் செக் பண்ணுகிறார்கள். அதற்குப் பிறகு சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். அதற்காக எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறார்கள்? அந்தக் கட்டணம் அதிகமானதா என்பதுதான் கேள்வியின் நோக்கம். அநதக் கட்டணத்தைக் குறைப்பதில் அரசு ஏன் தயக்கம் காட்டுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கட்டணம் ஒரே மாதிரியாகத்தான் 1963-ம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறது. ஆனால் முன்பு மூன்று ஆண்டுகளுக்கும், ஒவ்வொரு ஆண்டிற்கும் தனித்தனியாக வசூலிக்கப்பட்டது. இப்பொழுது மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து வசூலிக்கப்படு கிறது. முன்பு முதல் ஆண்டில் 150 ரூபாய், அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூ. 75, ரூ. 75 என்ற வீதத்தில் மொத்தம் 300 ரூபாய் வசூலிக்கப்பட்டது. இப்பொழுது 300 ரூபாய் ஒரே ஆண்டில் மொத்தமாக வசூலிக்கப்படுகிறது.

குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

குறுகியகால * வினா எண். 1. திரு. என். பழனிவேல்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீண்ட நாட்களாக பரிசீலனையில் இருந்து வந்த பழனி வட்டத்திலுள்ள குதிரையாறு நீர்த் தேக்கத் திட்டத்தின் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இத் திட்டத்திற்கான மதிப்பீடுகளை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அரசுக்கு அனுப்பியுள்ளார். திட்டம் அரசின் ஆய்வில்உள்ளது.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, பழனி வட்டத் திலுள்ள குதிரையாறு நீர்த் திட்டம் நீண்ட நாட்களாக இழுத்து அடிக்கப்பட்டு தற்போது ஆய்வு செய்யப்பட்டு தலைமை பொறியாளரிடம் இருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்ளப்படுமா? இதனால் எத்தனை ஏக்கர் பாசன வசதி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.